எண். 55-23/சு.அ/கா.ந/2020-21
காரைக்கால் நகராட்சி
****

தேதி: 14-08-2020

# செய்திக்குறிப்பு

புதுவை மாநிலத்தில் கொரோனா (அ) கோவிட்-19 வைரஸ் தொற்று அதிவேகமாக பரவிவரும் நிலையில், அதனை முன்னிட்டு 14-08-2020 முதல் புதிய வழிகாட்டு நெறிமுறைகள் அமல்படுத்தப்பட்டுள்ளன. காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தற்போதைய வழிகாட்டு நெறிமுறைகளில் கண்டுள்ளபடி காரைக்கால் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து வியாபார நிறுவனங்களும் காலை 6.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை மட்டுமே இயங்க வேண்டும்.

- **உணவகங்கள் கண்டிப்பாக இரவு 7.00 மணி வரை மட்டுமே இயங்க அனுமதிக்கப்படும்.**
- **கடைகளில் கை கழுவும் வசதி செய்யப்பட வேண்டும். மேலும் வாடிக்கையாளர்கள் கை கழுவி கடை உள்ளே வருகிறார்கள் என்பதை உறுதி செய்ய வேண்டும்.**
- **சமூக இடைவெளி (வாடிக்கையாளர் மற்றும் தொழிலாளர் இடையே கடைப்பிடிக்கவேண்டும்.**
- **வாடிக்கையாளர் மற்றும் தொழிலாளர்கள் முக கவசம் அணிந்திருப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.**
- **வாடிக்கையாளர் கை வைக்கும் இடங்கள் தொடர்ந்து கிருமி நாசினி மூலம் சுத்தம் செய்யப்பட வேண்டும்.**
- **வாடிக்கையாளர்களை போதுமான எண்ணிக்கையில் சமூக இடைவெளியை கடைப்பிடிக்கும் வகையில் உள்ளே அனுமதிக்கவேண்டும்.**
- **கட்டாயம் வரிசையில் நிற்கும்போது சமூக இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும்.**

மேற்கண்ட உத்தரவுகளை மீறுபவர்கள் மீது காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின்படி புதுச்சேரி நகராட்சி சட்ட விதிகள், குற்றவியல் சட்டம் எண்:188, பேரிடர் மேலாண்மை விதிகள் 2005, பிரிவு 51 முதல் 60 மற்றும் தொற்று நோய் சட்டம் 1897-ன் படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அவர்கள் மீது அபராதம் விதித்தல் மற்றும் உரிமம் ரத்து செய்தல் போன்ற கடும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என அறிவுறுத்தப்படுகிறது.

GOVERNMENT OF PONDICHERRY · DEPT. OF INFORMATION & PUBLICITY · KARAIKAL

(ஒப்பம்)
ஆணையர்
காரைக்கால் நகராட்சி

பெறுநர்:

1. உதவி இயக்குனர், செய்தி மற்றும் விளம்பரத்துறை, காரைக்கால்.
2. டைமண்ட் T.V. காரைக்கால் - Please Scroll daily
3. அகில இந்திய வானொலி நிலையம் - நிகழ்ச்சியின் இடையே ஒலிபரப்பவும் காரைக்கால்
4. அனைத்து தினசரி நாளிதழ்கள்.

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது:

1. மாவட்ட ஆட்சியர் அவர்கள், காரைக்கால்.
2. இயக்குனர் அவர்கள், உள்ளாட்சித் துறை, புதுச்சேரி.

**/health-20/**